**செய்தி வெளியீடு எண்: 198** **நாள்: 04.03.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.3.2019) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அசோக் நகர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 7 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், பள்ளிக்கல்வித் துறையில் 533 கோடியே 34 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்களை திறந்து வைத்தார்கள்.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில், அரசுப் பள்ளி மாணாக்கர்கள் போதிய கணினி திறன்களை அடையும் வகையில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hitech Labs) ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.6.2017 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்தார்கள்.

அதன்படி, சென்னை, அசோக் நகர் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 7 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் நிறுவப்பட்டுள்ள 6028 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 515 கோடியே 52 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள்;

பள்ளிக் கல்வி இயக்கக சார்பில் நபார்டு கடனுதவி திட்டத்தின் மூலம் காஞ்சிபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 3 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 1 மேல்நிலைப் பள்ளியில் 6 கோடியே 22 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிவறைகள், குடிநீர் மற்றும் சுற்றுச்சுவர்;

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம்– மூக்கனஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மாட்லாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2 கோடியே 49 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள், கலை மற்றும் தொழில் அறைகள், அறிவியல் ஆய்வகங்கள், நூலக அறைகள், கணினி அறைகள் மற்றும் கழிவறைகள்;

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பாடாலூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மஞ்சக்குப்பம் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள வேதாரண்யம் ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு 8 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூட்டரங்கம், வகுப்பறைகள், முதல்வர் அறை, கல்வியாளர்கள் அறை, உயிரியல் ஆய்வகம், அலுவலக அறை, இருப்பு அறை, நூலகம், கணினி ஆய்வகம், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர்;

பொது நூலக இயக்ககத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூரில் 69 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிளை நூலகக் கட்டடம்;

என மொத்தம் 533 கோடியே 42 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பாடங்களை கணினி மூலம் கற்பிக்கும் வகையில் 36 கோடியே 78 லட்சம் ரூபாய் செலவில் 29,965 மடிக்கணினிகள் வழங்கிடும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 4 முதுகலை ஆசிரியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ், கல்வி மேலாண்மைத் தகவல் முறைமை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்துவதற்காக 23,743 அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு 30 கோடி ரூபாய் செலவில் மடிக்கணினிகள் வழங்கிடும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 3 அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திரு. இரா.சுடலைக்கண்ணன், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு.வி.சி.இராமேஸ்வரமுருகன். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்–II திரு.பொ.குப்புசாமி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி சி. உஷாராணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**